28.11.2023

அசல் வழக்கு எண்: 65/2020

வா.சா.1 சாட்சி குணசேகரன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**30.10.2019ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது ஆதார் அடையாள அட்டையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சாட்சி குணசேகரன் என்பவருடைய ஆதார் அடையாள அட்டையின் அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்ட நகல் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்ததற்கான ஒப்புகையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**05.06.2020ம் தேதியிட்ட ஒப்புகை சீட்டு வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

24.06.1996ம் தேதியிட்ட ஜெனரல் பவர் பத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**24.06.1996ம் தேதியிட்ட ஜெனரல் பவர் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

வாதிகளும் 1ம் பிரதிவாதியும் ராஜா என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**25.01.2006ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்**

**வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

வாதிகளும் 1ம் பிரதிவாதியும் கிருஷ்ணன் என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**27.02.2006ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)